# பத்திரிக்கைக்கான
# சுருக்கக் குறிப்பு

## C&AGன் தணிக்கை அறிக்கை

## கட்டிட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் குறித்த செயலாக்கத் தணிக்கை

### தமிழ்நாடு அரசு

**2021-22**

31 மார்ச் 2022 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான 'கட்டிட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன்' மீதான செயலாக்கத் தணிக்கை குறித்த இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கை அறிக்கை (2024 ஆம் ஆண்டின் அறிக்கை எண் 03) 29-06-2024 அன்று மாநில சட்டப் பேரவையில் ஒப்படைக்கப்பட்டது.

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய தணிக்கை கண்டுபிடிப்புகள் பின்வருமாறு:

**'கட்டிட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன்' குறித்த செயலாக்கத் தணிக்கை**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் (TNCWWB), மதிப்பீடு செய்யப்பட்ட, வசூலிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொழிலாளர் வரி குறித்த தரவுத்தளத்தைப் பராமரிக்கவில்லை. இதனால் செஸ்ஸை சரியான நேரத்தில் மதிப்பீடு செய்யவும், அதன் அளவினை கணக்கிடவும் ஒரு அமைப்புமுறை இருக்கவில்லை.

**(பத்தி 2.3; பக்கம் 15)**

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் (Directorate of Industrial Safety and Health – DISH) கட்டுமானத் தளங்கள்/வேலை அளிப்போர்கள் பதிவு செய்யப்படுவதில் குறிப்பிடத்தக்க குறைபாடு இருந்தது. இது, தொழிலாளர் வரி மதிப்பிடப்படுவதை உறுதி செய்வதற்காக TNCWWB உடன் மேற்கொள்ளப்படும் தரவுப் பகிர்வின் நோக்கத்தை மிகவும் பாதித்தது. 2017–22 ஆண்டுகளில், சோதனை–சரிபார்க்கப்பட்ட 57 உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட 18,587 கட்டுமானப் பணிகளுள், ஐந்து உள்ளாட்சி அமைப்புகளில் நிறைவேற்றப்பட்ட 101 பணிகள் (ஒரு விழுக்காடு) மட்டுமே DISH உடன் பதிவு செய்யப்பட்டிருந்தன.

**(பத்தி 2.2; பக்கம் 12)**

கட்டிட அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களால் கட்டுமானச் செலவு கணிசமாக குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. கட்டுமானத்தின் மதிப்பிடப்பட்ட தொகையின் சரித்தன்மையை உறுதி செய்வதற்கான ஒரு அமைப்புமுறை உள்ளாட்சி அமைப்புகளிடம் இல்லை.

**(பத்தி 2.4; பக்கம் 16)**

வசூலிக்கப்படும் செஸ் தொகையை மதிப்பிட TNCWWBயிடம் எந்த ஒரு அமைப்புமுறையும் இல்லை. இதன் விளைவாக, TNCWWB அதன் ஒரே வருவாய் ஆதாரத்தின் மீது எந்தக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. உள்ளாட்சி அமைப்புகளால் வசூல் செய்யப்பட்ட தொழிலாளர் செஸ்ஸினை TNCWWBன் உள்ளபடியான செஸ் வரவுடன் ஒத்திசைவு செய்ய ஒரு அமைப்புமுறை இல்லாததன் விளைவாக, பணக் கையாடல், குறைவான செலுத்தம், தாமதமான செலுத்தம் மற்றும் வசூலிக்கப்பட்ட தொகையின் தவறான செலுத்தம் போன்ற பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன.

**(பத்திகள் 3.1 மற்றும் 3.2; பக்கங்கள் 21 மற்றும் 22)**

சோதனை–சரிபார்க்கப்பட்ட 117 செஸ் செலுத்தும் முகமைகளுள், ஒரே ஒரு முகமையின் செலுத்தம் மட்டுமே TNCWWBன் வரவுகளுடன் ஒத்திருந்தது. 83 நேர்வுகளில், TNCWWBஆல் பெறப்பட்ட தொகை குறைவாகவும் மற்றும் 33 நேர்வுகளில், TNCWWBஆல் கணக்கிடப்பட்ட வரவுகள் இந்த முகமைகளால் செலுத்தப்பட்ட உண்மையான தொகையை விட அதிகமாகவும் இருந்தன.

**(பத்தி 3.3; பக்கம் 24)**

வசூலிக்கப்பட்ட செஸ் தொகையை, உள்ளாட்சி அமைப்புகள் TNCWWBக்கு செலுத்தாமல், தங்கள் கணக்குகளில் வைத்திருந்தன. இது, தற்காலிகமான பணக் கையாடலுக்கு வழிவகுத்தது. சோதனை–சரிபார்க்கப்பட்ட 124 உள்ளாட்சி அமைப்புகளில் 99 கட்டுமானத் தளங்களால் ₹221.81 கோடி தொகை செலுத்தம் செய்யப்படாமல், நிலுவையில் இருந்தது. பெருநகர சென்னை மாநகராட்சியில் (Greater Chennai Corporation – GCC) மட்டும் ₹207.08 கோடி செலுத்தம் செய்யப்படாமல் நிலுவையில் இருந்தது.

**(பத்தி 3.4; பக்கம் 26)**

கட்டுமானத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவில் ஒரு விழுக்காடு என்ற திருத்தப்பட்ட விகிதத்திற்குப் பதிலாக 0.3 விழுக்காடு என்ற குறைவான மதிப்பீடு கவனிக்கப்படாமல் போனது.

**(பத்தி 3.6; பக்கம் 28)**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், தொழிலாளர் செஸ் தொகை குறைவாக செலுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட 90 நேர்வுகளின் விரிவான ஆய்வில், 68 நேர்வுகளில், ₹15.85 இலட்சம் முறைகேடு நடந்திருப்பது வெளியானது.

**(பத்தி 3.7; பக்கம் 29)**

TNCWWB, 1994ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அமைப்புசாரா கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் தொடர்ந்தன. பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் ஆதார் எண், கைப்பேசி எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்ற முக்கியத் தகவல்களை கைப்பற்றுவதில் இருந்த தவறுகள் TNCWWBன் பதிவு தரவுத்தளத்தின் தரத்தை பாதிப்பதாக அமைந்தது.

**(பத்திகள் 4.2 மற்றும் 4.3; பக்கங்கள் 36 மற்றும் 38)**

தகுதியான கட்டுமானத் தொழிலாளர்களைக் கண்டறிவதில் இருந்த குறைபாடு காரணமாக, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் பதிவு செய்யப்படவில்லை. மாநிலங்களுக்கு இடையே இடம்பெயர்ந்த தொழிலாளர்களை அதன் கீழ் கொண்டு வருவதற்கு TNCWWB பயனுள்ள நடவடிக்கை எடுக்கவில்லை. மாநிலங்களுக்கு இடையே இடம்பெயர்ந்ததாக மதிப்பிடப்பட்ட 1.45 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களில் ஒருவரும் TNCWWB உடன் பதிவு செய்யப்படவில்லை.

**(பத்திகள் 4.4 மற்றும் 4.6; பக்கங்கள் 44 மற்றும் 51)**

பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகளை செயல்படுத்துவதில் இருந்த அதிகப்படியான தாமதத்தால், அவர்களுக்கான நலத்திட்டங்களின் அமலாக்கம் பாதிக்கப்பட்டது. வேறு பல மாநிலங்களை விட ஓய்வூதியத்தின் அளவு குறைவாக இருந்தது, மற்றும் 11 ஆண்டுகளுக்கும் மேலாக இது தேக்கநிலையிலேயே இருந்தது.

**(பத்தி 5.2; பக்கம் 56)**

திருமணம் மற்றும் மகப்பேறு உதவித்திட்டம் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும்/அல்லது ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ள அனைவருக்கும் பொருந்தக்கூடிய அதே மாதிரியான வேறு திட்டம் இருந்ததன் காரணமாக, மேற்கூறப்பட்ட திட்டங்கள் ஒரு சிறிய எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கே பலனளித்தது.

**(பத்தி 5.3; பக்கம் 60)**

திட்டத்தை செயல்படுத்துவதில் தெளிவு இல்லாததால், தகுதியற்ற நபர்களுக்கு பலன்கள் நீட்டிக்கப்பட்டது. தகுதியில்லாத பயனாளிகள் பற்றிய TNeGAன் மின்னணுத் தரவை, TNCWWBன் ஓய்வூதியதாரர்களின் மின்னணுத் தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில், 7,459 கோரிக்கைகளுக்கான ₹2.26 கோடி தகுதியில்லாத நபர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது வெளியானது. இதேபோல், தகுதியில்லாத 9,116 நபர்கள் TNCWWB மூலம் ஓய்வூதியப் பலன்களைப் பெற அனுமதிக்கப்பட்டனர். இதற்கான ஓராண்டு தேவை ₹10.94 கோடியாக இருந்தது. மேலும், தகுதியில்லாத 27,943 நபர்கள் ₹5.78 கோடி கோவிட் பண உதவியைப் பெற்றிருந்தனர்.

**(பத்தி 5.5; பக்கம் 64)**

கோவிட்–19 பெருந்தொற்றின் போது வேண்டிய முயற்சி எடுக்கப்படாததால், அதிக எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு பலன்கள் கிடைக்கவில்லை. தரவுத்தளத்தில் உள்ள சிக்கல்கள் காரணமாக தகுதியான 1.64 இலட்சம் (14 விழுக்காடு) தொழிலாளர்களுக்கு கோவிட் பண உதவி வழங்கப்படவில்லை. அதே சமயம், சோதனை–சரிபார்க்கப்பட்ட மாவட்டங்களில் 1,729 பயனாளிகள் ₹33.31 இலட்சம் கூடுதல் தொகையைப் பெற்றிருந்தனர்.

**(பத்தி 5.7; பக்கம் 67)**

அரசின் ஒப்பந்ததாரர்களில் 3.88 விழுக்காடு மட்டுமே DISH உடன் பதிவு செய்யப்பட்டிருந்தனர். சென்னை மற்றும் மதுரையில் மட்டுமே குறைந்த அளவிலான களநிலை ஆய்வு இருந்ததாலும், பணியாளர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதாலும் DISHன் மேற்பார்வை போதுமானதாக இருக்கவில்லை.

**(பத்தி 5.9; பக்கம் 70)**

2017-22 ஆண்டுகளில் பட்ஜெட் தயாரிக்கப்படாததால் **TNCWWBன்** நிதி நிர்வாகம் பாதிக்கப்பட்டது. உபரி நிதிகளின் விவேகமற்ற முதலீட்டினால், அவற்றின் மீதான வட்டி குறைவாகப் பெறப்பட்டது. மற்ற 17 நல வாரியங்களால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் நிர்வாகத்திற்கான செலவினத்தை TNCWWB ஏற்றுக்கொண்டதால், அதன் நிர்வாகச் செலவானது உச்சவரம்பான ஐந்து விழுக்காட்டையும் தாண்டியது.

**(பத்திகள் 6.1.3, 6.1.5 மற்றும் 6.1.6; பக்கங்கள் 82 முதல் 87 வரை)**